# மேலூர் நகராட்சி

## சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு அறிவிப்பு

ந.க.எண்.712/2022/அ1

நாள்: 11.04.2022

1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 81A , அரசாணை எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-4) துறை, நாள் : 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/ஆர்.1, நாள்: 01.04.2022 ஆகியவற்றில் வழிவகை செய்யப்பட்டதன் அடிப்படையில் மேலூர் நகராட்சியின் நகர்மன்றத் தீர்மான எண்.20, நாள்: 11.04.2022-ன் படி 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வின்படி, கீழ்க்கண்டவாறு சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### தற்போதுள்ள வரி விதிப்புகளுக்கான உயர்வு விபரம் :

1) 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் 25% உயர்வு செய்யப்படும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் 50% உயர்வு செய்யப்படும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் 75% உயர்வு செய்யப்படும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு ஏற்கனவே உள்ள சொத்துவரியில் 100% உயர்வு செய்யப்படும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% உயர்வு செய்யப்படும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டிடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% உயர்வு செய்யப்படும்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போது உள்ள அடிப்படை மதிப்பு 100 சதவிதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்படும்.
8) திருத்தியமைக்கப்பட்டுள்ள வார்டு மறுவரையறையின்படி, புதிய வார்டுகள் வாரியாக மண்டலங்கள் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | மண்டலம் | வார்டு மறுவரையறையின்படி தற்போது நிர்ணயம் செய்யப்படும் தெருக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | A | 152 |
| 2. | B | 91 |
| 3. | C | 256 |

அரசாணையின்படி, சொத்துவரி பொது சீராய்வின்படி, சொத்துவரி மற்றும் காலிமனை வரி உயர்வு தொடர்பான ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் இவ்வறிவிப்பு பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் 30 தினங்களுக்குள் எழுத்துப்பூர்வமாக நேரிலோ, தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் (commr.melur@tn.gov.in) மூலமாகவோ நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க தெரிவிக்கப்படுகிறது. மேலும் தொடர்புடைய அரசாணை, சுற்றறிக்கை, நகர்மன்றத் தீர்மானம் மற்றும் சுயமதிப்பீட்டுப் படிவம் நகராட்சியின் வலைதளத்தில் www.tnurbantree.tn.gov.in/melur/ பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் விபரங்கள் வலைதளத்தில் பதிவிறக்கம் செய்தோ அல்லது நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

வெ.ஆ.எண்.113 / செ.ம.தொ.அ
மதுரை-20 நாள்: 12.4.2022

(ஒம்) சொ.ஆறுமுகம்,
ஆணையாளர், மேலூர் நகராட்சி.

Scanned by CamScanner